

விருகம்பாக்கம் 128–வது வார்டில் தமிழச்சி தங்கபாண்டியன் எம்.பி.யின் தொகுதி மேம்பாட்டு நிதி, சட்டமன்ற உறுப்பினர் பிரபாகர் ராஜாவின் தொகுதி மேம்பாட்டு நிதியில் பல்நோக்கு புதிய கட்டடங்கள் மற்றும் நவீன உடற்பயிற்சிக் கூடத்தை மாமன்ற உறுப்பினர் ரத்னா லோகேஸ்வரன் தலைமையில் அமைச்சர் மா.சுப்பிரமணியன் திறந்து வைத்தார். மாமன்ற உறுப்பினர்கள், கழக நிர்வாகிகள் உடனுள்ளனர்.

மாமன்ற உறுப்பினர் ரத்னா லோகேஸ்வரன் தலைமையில்

# 128வது வார்டில் பல்நோக்கு கட்டடம் - உடற்பயிற்சிக் கூடம்!

## அமைச்சர் மா.சுப்பிரமணியன் திறந்து வைத்தார்! தமிழச்சி தங்கபாண்டியன் எம்.பி. - ஏ.வி.எம்.பிரபாகரராஜா எம்.எல்.ஏ. பங்கேற்பு!

சென்னை, பிப். 20-

விருகம்பாக்கம் 128வது வார்டில் நாடாளுமன்ற உறுப்பினர் தமிழச்சி தங்கபாண்டியன், சட்டமன்ற உறுப்பினர் ஏ.வி.எம்.பிரபாகரராஜா ஆகியோர் தொகுதி மேம்பாட்டு நிதியில் பல்நோக்கு கட்டடம் மற்றும் நவீன உடற்பயிற்சி கூடத்தை மாமன்ற உறுப்பினர் ரத்னா லோகேஸ்வரன் தலைமையில் அமைச்சர் மா. சுப்பிரமணியன் திறந்து வைத்தார்.

விருகம்பாக்கம், 128வது வார்டில், விருகம்பாக்கம் இளங்கோ நகர் மற்றும் காமராஜர் சாலையில் புதிய பல்நோக்கு கட்டிடம் திறப்பு விழா மாமன்ற உறுப்பினர் ரத்னா லோகேஸ்வரன் தலைமையில் நடைபெற்றது..

தென்சென்னை நாடாளுமன்ற உறுப்பினர் தமிழச்சி தங்கபாண்டியன் அவர்களின் தொகுதி மேம்பாட்டு நிதி ரூ.65,00,000/- (ரூபாய் அறுபத்தைந்து இலட்சத்தில்)

விருகம்பாக்கம் சட்டமன்ற உறுப்பினர் பிரபாகரராஜாவின் தொகுதி மேம்பாட்டு நிதி ரூ.22,00,000/- (ரூபாய் இருபத்திரண்டு இலட்சத்தில்)

பல்நோக்கு கட்டிடம் புதிய கட்டிடங்கள் மற்றும் நவீன உடற்பயிற்சி கூடத்தை மக்கள் பயன்பாட்டிற்கு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வு துறை அமைச்சர் மார்சுப்பிரமணியன் திறந்து வைத்தார்கள்..

இந்நிகழ்வில் தென் சென்னை நாடாளுமன்ற உறுப்பினர் தமிழச்சி தங்கபாண்டியன், விருகம்பாக்கம் சட்டமன்ற உறுப்பினர் ஏ.வி.எம்.பிரபாகர்ராஜா, பெருநகர சென்னை மாநகராட்சி கணக்கு நிலைக்குழு தலைவரும், செயற்குழு உறுப்பினருமான தனசேகரன், கலைஞர் நகர் வடக்கு பகுதி கழக செயலாளர் ரவிசங்கர் ராஜா,

கலைஞர் நகர் தெற்கு பகுதி கழக செயலாளர் கண்ணன், மாவட்ட துணை செயலாளர் வாசுகி பாண்டியன், தலைமை பொதுக் குழு உறுப்பினர் தங்கராஜ், வட்ட கழக செயலாளர்கள் அண்ணன் கோவிந்தராஜன், ராஜா, மைக்கேல், கோயம்பேடு லோகு, வட்ட கழக நிர்வாகிகள், பகுதி கழக நிர்வாகிகள், அணிகளின் நிர்வாகிகள், மகளிர் அணி நிர்வாகிகள், பொதுநலச் சங்க நிர்வாகிகள் மற்றும் பெருநகர சென்னை மாநகராட்சி உயர் அதிகாரிகள், காவல்துறை அதிகாரிகள் கலந்து கொண்டனர்.



திருவள்ளூர் மாவட்டம் திருத்தணி தொகுதி உட்பட்ட திருத்தணி மேற்கு ஒன்றியம் அம்மையார்குப்பம் ஊராட்சியில் திருத்தணி சட்டமன்ற உறுப்பினர் நிதியிலிருந்து ரூபாய் 10 லட்சம் மதிப்பில் காரிய மேடையை திருவள்ளூர் மேற்கு மாவட்ட செயலாளர் திருத்தணி சட்டமன்ற உறுப்பினர் திருத்தணி எஸ்.சந்திரன்மக்கள் பயன்பாட்டிற்கு திறந்து வைத்தார் உடன் ஒன்றிய கழகச் செயலாளர்கள் சி.என். சண்முகம், பெ.பழனி, செங்குட்டவன், பா.சம்பத், ம.ரகு, ம.ரமேஷ்,வி.ஜி. மோகன், சரவணன், மணி, மற்றும் கழக நிர்வாகிகள் பலர் உள்ளனர்

ஜெ.கருணாநிதி எம்.எல்.ஏ. தலைமை! கே.ஏழுமலை - ராஜா அன்பழகன் முன்னிலை!

# தியாகராயர் நகர் கிழக்கு பகுதி இளைஞர் அணி ஆலோசனைக் கூட்டம்!

## பகுதி அமைப்பாளர் கா.மணிகண்டன் அறிக்கை!

சென்னை, பிப். 20

தியாகராயர் நகர் கிழக்குப் பகுதி இளைஞர் அணி அமைப்பாளர் கா.மணிகண்டன் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:

சென்னை தென் மேற்கு மாவட்டம், தியாகராயர் நகர் கிழக்கு பகுதி இளைஞர் அணி நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டம் இன்று (20.02.2025 வியாழக்கிழமை) மாலை 5 மணியளவில், எண். 87, உஸ்மான் சாலையில் உள்ள தியாகராயர் நகர் சட்டமன்ற உறுப்பினர் அலுவலகத்தில் நடைபெறுகிறது.

தியாகராயர் நகர் கிழக்கு பகுதிக் கழகச் செயலாளரும், தியாகராயர் நகர் சட்டமன்ற உறுப்பினருமான ஜெ.கருணாநிதி தலைமை வகிக்கிறார்.

தியாகராயர் நகர் மேற்குப் பகுதிக் கழகச் செயலாளர் கே.ஏழுமலை எம்.சி, மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் ராஜா அன்பழகன் எம்.சி. ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

இக்கூட்டத்தில் தியாகராயர் நகர் கிழக்குப் பகுதி இளைஞர் அணி துணை அமைப்பாளர்கள் அனைவரும் தவறாமல் கலந்து கொண்டு சிறப்பிக்கும் படி கேட்டுக்கொள்கிறேன்.

பொருள்:

மார்ச் 1 கழகத் தலைவர், தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் 72 வது பிறந்த நாள் விழா மற்றும் கழக ஆக்கப் பணிகள்.

இவ்வாறு தியாகராயர் நகர் கிழக்குப் பகுதி இளைஞர் அணி அமைப்பாளர் கா.மணிகண்டன் தெரிவித்துள்ளார்.



திருவொற்றியூர் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட வார்டு 11, வார்டு 1, ஆகிய இடங்களில் வடசென்னை நாடாளுமன்ற உறுப்பினர் டாக்டர். கலாநிதி வீராசாமி ஆய்வு மேற்கொண்டார். இந்த ஆய்வில் சென்னை வடகிழக்கு மாவட்டக் கழகச் செயலாளர் மாதவரம் எஸ்.சுதர்சனம் எம்.எல்.ஏ., திருவொற்றியூர் சட்டமன்ற உறுப்பினர் கே.பி.சங்கர், மண்டலக் குழுத் தலைவர் தி.மு.தனியரசு, பகுதி கழகச் செயலாளர் வை.ம.அருள்தாஸ், வட்டக் கழகச் செயலாளர்கள் குறுத்து முனுசாமி, சிவகுமார் எம்.சி., மாமன்ற உறுப்பினர்கள் திருமதி. சரண்யா கலைவாணன் மண்டல அலுவலர், மாநகராட்சி அதிகாரிகள், மற்றும் மாநில, மாவட்ட நிர்வாகிகள், பகுதிக் கழக நிர்வாகிகள் உடன் இருந்தனர்.

தாம்பரம் மாநகர வர்த்தகர் அணி துணை அமைப்பாளர்

# இரா.செல்வகுமார் தாயார் தனம்மா மறைவு!

## எஸ்.ஆர்.ராஜா எம்.எல்.ஏ. - மேயர் வசந்தகுமாரி - டி.காமராஜ் - கழகத்தினர் அஞ்சலி!

தாம்பரம், பிப். 20 -

தாம்பரம் மாநகர வர்த்தக அணி துணை அமைப்பாளரும் முன்னாள் நகர மன்ற உறுப்பினரும் இரா.செல்வகுமாரின் தாயார் ஆர்.தனம்மா (வயது 89) அவர்கள் நேற்று (19.2.2025) காலை மறைவெய்தினார் என்பதை அறிவிக்க வருந்துகிறோம்.

தாம்பரம் மாநகர வர்த்தகர் அணி துணை அமைப்பாளர் இரா.செல்வகுமாரின் தாயார் தனம்மா (வயது 89) அவர்கள் சிறிது நாட்களாக உடல் நிலை சரியில்லாமல் மருத்துவமனையில் சிகிச்சைப் பெற்று வந்த நிலையில் நேற்று (19.2.2025) காலை மவையெய்தினார்.

தகவல் அறிந்த தாம்பரம் மாநகர செயலாளர் எஸ்.ஆர். ராஜா எம்.எல்.ஏ. அன்னாரது இல்லம் வந்து தனம்மா உடல் மீது மலர் மாலை வைத்து மரியாதை செலுத்தி, செல்வகுமார் குடும்பத்தாருக்கு ஆறுதல் கூறினார்.

மேலும் தாம்பரம் மாநகராட்சி மேயர் க. வசந்தகுமாரி, துணை மேயர் ஜி. காமராஜ், மாவட்ட ஊராட்சி தலைவர் குன்றதூர் ஒன்றிய கழக செயலாளர் படப்பை.மு.மனோகரன், மண்டலக்குழு தலைவர்கள் டி.காமராஜ், எஸ். இந்திரன், தலைமை செயற்குழு உறுப்பினர் ஆதிமாறன், மாமன்ற உறுப்பினர்கள் டி.ஆர்.கோபி, ரமணி அதிமூலம், பொருங்களத்தூர் எஸ். சேகர், பி ஜோதிகுமார், பெரியநாயகம், மற்றும் கழக நிர்வாகிகள் ஜா.ரவிகுமார், ஆர்.செல்வகுமார், எஸ்.ஜி.கருணாகரன், கி.வேலுமணி, விஜயன், மாநகர இளைஞரணி துணை அமைப்பாளர் ராஜேஷ்சர்தார்,

ஆர்.அகஸ்டின், என்.ஷாஜகான், இரா.விஜயகுமார், தங்கராஜ், எஸ்கார்த்திக், செம்பாக்கம் ரமேஷ், கோடீஸ்வரன், ஐசக், பிரபாகரன், திவாகர், பி.வி.ஏகாம்பரம், டி.முனுசாமி, பி.குருமணி, வழக்கறிஞர் நடராஜன், விக்கி, மங்களபுரம் எம்.பாபு, டி.மண்ராஜன், ரமேஷ், பி.காளியப்பன், ம. கல்யாணி, ஞானப்பிரகாசம், இரா.காந்தசாமி, மா.கன்னியப்பன், டிசுந்தர், ராமு, க.மு. சூரியா, த.பிரவீன்குமார், நவீன்குமார் உட்பட ஏராளமானோர் கலந்துகொண்டு அஞ்சலி செலுத்திர்.

நேற்று மாலை 5 மணியளவில் இறுதி சடங்கு முடிந்து கடபேரி மயானத்திற்கு இறுதி ஊர்வலமாக கொண்டு சென்று மின் மயானத்தில் எரியூட்டப்பட்டது இதில் அனைத்து கட்சி நிர்வாகிகளும் கழக தோழர்களும் பொதுமக்களும் பெரும் திரளாக பங்கேற்றனர்.

டி.என்.பி.எஸ்.சி. குரூப் 4 தேர்விற்கான

# கட்டணமில்லா பயிற்சி வகுப்புகள்!

## இராயபுரத்தில் ஐட்ரீம் மூர்த்தி எம்.எல்.ஏ. துவக்கி வைத்தார்!

சென்னை, பிப்.20-

இராயபுரம் சட்டமன்ற உறுப்பினர் ஐட்ரீம் இரா. மூர்த்தி எம்.எல்.ஏ. முயற்சியால், தொழிலாளர் நலத் துறை மற்றும் திறன் மேம்பாட்டுத் துறை இணைந்து, சென்னை அரசு வேலை வாய்ப்பு மற்றும் பயிற்சித் துறையின் டி.என்.பி.எஸ்.சி. குரூப் 4 தேர்விற்கான கட்டணமில்லா பயிற்சி வகுப்புகள் ஐ.டி.ஐ வளாகத்தில் இராயபுரம் சட்டமன்ற உறுப்பினர் ஐட்ரீம் இரா. மூர்த்தி எம்.எல்.ஏ. தொடங்கி வைத்தார். மாமன்ற உறுப்பினர் வேளாங்கண்ணி, வட்ட செயலாளர் கௌரீஸ்வரன் மண்டல இணை இயக்குநர் (வேலைவாய்ப்பு) அலுவலகம் இர.தேவேந்திரன், ஆர்.கே.நகர் தொழிற் பயிற்சி நிலையம் முதல்வர் எஸ்.டெய்சி ஜேனட், மாவட்ட திறன் பயிற்சி அலுவலர் உதவி இயக்குநர் கே.சசிதான் ஆகியோர் உடன் இருந்தனர்.

# நீலகிரி மாவட்டம், கூடலூர் சட்டமன்றத் தொகுதி தி.மு.க.,தோழமை கட்சி நிர்வாகிகள் கூட்டம்!



நீலகிரி, பிப்.20-

நீலகிரி மாவட்டம், கூடலூர் சட்டமன்ற தொகுதி தி.மு.க.,தோழமை கட்சி நிர்வாகிகள் கூட்டம் உதகை ஜெம் பார்க் ஓட்டல் கூட்ட அரங்கில் மாவட்ட திமுக பொறுப்பாளர் கே.எம். ராஜு அவர்கள் தலைமையில், மாண்புமிகு தமிழ்நாடு அரசின் தலைமை அரசு கொறடா திரு.கா.ராமசந்திரன்,கழக உயர்நிலை செயல் திட்டக்குழு உறுப்பினர் பா.மு.முபாரக், ஆகியோர் முன்னலையில் நடபெற்றது.

கூட்டத்தில் தி.மு.க., துணை பொதுச்செயலாளர் - நீலகிரி நாடாளுமன்ற உறுப்பினர் ஆ.இராசா அவர்கள் கலந்துக்கொண்டு சிறப்புரையாற்றினார்.

முன்னதாக சி.பி.எம் மூத்த தலைவர் வாசு, அகில இந்திய காங்கிரஸ் கட்சி உறுப்பினர் கோசிபேபி, சி.பி.ஐ முகமது கனி, விடுதலை சிறுத்தைகள் கட்சி சகாதேவன், மாவட்ட செயலாளர் துரை புவனேஸ்வரன், இந்திய யூனியன் முஸ்லிம் லீக் மாவட்டசெயலாளர் அனீபா ஆகியோர் வாழ்த்தி பேசினர்.

கூட்டத்தில் கூடலூர் தொகுதியில் கடந்த 50 ஆண்டுகளாக நிலுவையி லுள்ள ஜென்மம் நிலம் பிரிவு17 நிலப்பிரச்சனைக்கு தீர்வு காண கடந்த 30.1.2025 அன்று தலைமை செயலகத்தில் அரசு அதிகாரிகளை அழைத்து ஆலோசனை மேற்கொண்ட கழக தலைவர் மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களுக்கு நன்றியும் வாழ்த்தும் தெரிவிக்கப் பட்டது. மேலும், இதற்கு உறுதுணையாக இருந்து செயல்பட்ட கழக துணை பொதுச்செயலாளர், நீலகிரி நாடாளுமன்ற உறுப்பினர் மாண்புமிகு ஆ.இராசா அவர்களுக்கும் நன்றி தெரிவிக்கப் பட்டது.

கூட்டத்தில் திமுக சார்பில் மாவட்ட அவை தலைவர் போஜன், துணை செயலாளர்கள் லட்சுமி,ரவிகுமார், பொருளாளர் நாசர் அலி, தலைமைசெயற்குழு உறுப்பினர்கள் இளங்கோவன், திராவிடமணி, காசிலிங்கம்,செந்தில் ரங்கராஜ், மாநில பொறியாளர் அணி துணை செயலாளர் பரமேஸ்குமார், நகர செயலாளர்கள் ஜார்ஜ், இளஞ்செழியன், சேகரன், ஒன்றிய செயலாளர்கள் லியாகத்அலி, சிவானந்தராஜா, சுஜேஷ், ஓவேலி பேரூர் செயலாளர் சின்னவர், பொதுக் குழு உறுப்பினர் காளிதாசன், சதக்கத்துல்லா, அமிர்தலிங்கம், மாவட்ட திட்டக்குழு உறுப்பினர் ராஜேந்திரன், மாவட்ட அமைப்பாளர்கள் சசிகுமார், எல்கில் ரவி, காங்கிரஸ் கட்சி சார்பில் கோபிநாதன், அசரப், சிவராஜ், சாஜி, அசைனார், இபுனு, யாசீன், தாஹீர், குட்டன்,ஜெய்சன், முஸ்லிம் லீக் சார்பில் ஆலி உப்பட்டி, விடுதலை சிறுத்தைகள் கட்சி சார்பில் ராஜேந்திரபிரபு, துயில மேகம், மகேசன், அசரப் உட்பட ஏராளமானவர்கள் கலந்துக் கொண்டனர்.

முடிவில் மாவட்ட துணை செயலாளர் ரவிகுமார் நன்றி கூறினார்.

சைதை தொகுதி – மாவட்டப் பிரதிநிதி

# கிண்டி ஆர்.எல்.செல்வம் மறைவு!

## இன்று மாலை இறுதிச் சடங்குகள்!



சென்னை, பிப். 20 -

சென்னை தெற்கு மாவட்டம் சைதை பகுதிக் கழக முன்னோடியும், மாவட்டக் கழகப் பிரதிநிதியுமான கிண்டி ஆர்.எல்.. செல்வம் வயது 61 நேற்று (19.2.2025) உடல் நலக் குறைவால் இயற்கை எய்தினார் என்பதை வருத்தத்துடன் தெரிவித்துக் கொள்கிறோம்.

தகவல் அறிந்ததும், சைதை தொகுதியில் உள்ள கழக நிர்வாகிகள், கழக முன்னணியினர் அன்னாரது உடல் மீது மலர் மாலை வைத்து அஞ்சலி செலுத்தினர்.

மாவட்டப் பிரதிநிதி கிண்டி ஆர்.எல்.செல்வத்தின் இறுதி ஊர்வலம் இன்று (20.2.2205 - வியாழன்) மாலை 5.00 மணிக்கு சைதை ரயில்வே நிலையம் அருகில் உள்ள அன்னாரது இல்லத்திலிருந்து புறப்பட்டு கண்ணம்மா பேட்டை இடுகாட்டில் நடைபெறுகிறது.



தாம்பரம் மாநகர வர்த்தக அணி துணை அமைப்பாளர் முன்னாள் நகர மன்ற உறுப்பினர் இரா.செல்வகுமாரின் தாயார் இயற்கை எய்தினார். தகவல் அறிந்த தாம்பரம் மாநகர செயலாளர் எஸ்.ஆர்.ராஜா எம்.எல்.ஏ. மலர் மாலை வைத்து மரியாதை செலுத்தினர். இதில் தாம்பரம் மாநகராட்சி மேயர் க வசந்தகுமாரி, துணை மேயர் காமராஜ், மாவட்ட ஊராட்சி தலைவர் குன்றதூர் ஒன்றிய கழக செயலாளர் படப்பை.மு.மனோகரன், மண்டலக்குழு தலைவர்கள் டி.காமராஜ், எஸ்.இந்திரன், ஆதிமாறன், மாமன்ற உறுப்பினர்கள் டி.ஆர்.கோபி, ரமணி அதிமூலம், பொருங்களத்தூர் எஸ் சேகர், பி ஜோதிகுமார், பெரியநாயகம், மற்றும் கழக நிர்வாகிகள் ஜா.ரவிகுமார், ஆர்.செல்வகுமார், எஸ்.ஜி.கருணாகரன், கி.வேலுமணி, விஜயன், ராஜேஷ்சர்தார், ஆர்.அகஸ்டின், என்.ஷாஜகான், இரா.விஜயகுமார், தங்கராஜ், எஸ்கார்த்திக், செம்பாக்கம் ரமேஷ் உள்ளிட்ட ஏராளமான கழகத்தினர் அஞ்சலி செலுத்தினர்.

